கோரிக்கை எண் 43—சாலைப் பரோக்குவரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன். பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

" கோரிக்கை எண் 43—சாலைப்போக்கு வரத்துத் திட்டங்களுக்கான மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 100க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண் 47—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

" கோரிக்கை எண் 47 மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 45,00,600-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு 1970ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) மசோதாவை அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

12. அரசினர் மசோதாக்கள்.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) மசோதா.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I beg to move—

' That leave be granted for the introduction of the Tamil Nadu Appropriation (No. 4) Bill, 1970.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I introduce the Bill

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இம் மசோதா அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது: